**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

**CC.No.600003/2023**

Deposition of LW2 examined as PW6 Dt. 18.07.2025

| | |
|---|---|
| Name | தியானேஸ்வரன் |
| Father's/Husband's Name | சந்திரசேகர் |
| Village | கொற்றவநல்லூர் |
| Taluk | |
| Age | 28/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 18.07.25

(A1 to A3 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து ஐஸ்கிரீம் கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 முதல் 5 வரையிலானவர்கள் எனக்கு தெரியும். எதிரிகளை எனக்கு தெரியும். கொரோனா காலகட்டத்தில் சாராயம் விற்றதற்காக ஆஜர் எதிரிகளை போலிசார் கைது செய்தார்கள். அவர்கள் சிறையில் இருந்து வெளியில் வந்த பிறகு எனது பெரியப்பா மகன் அ.சா.2 அருண்ராஜ் வீட்டின் முன்பு நின்று கொண்டு அவர்தான் எதிரிகளை பற்றி போலிசில் கூறியதாக தவறாக நினைத்து கொண்டு குச்சிக்காரி தேவுடியா மகனே என்று கெட்ட வார்த்தைகளால் திட்டினார்கள். அ.சா.2 ஏன் இவ்வாறு திட்டுகிறீர்கள் என்று கேட்டார். அப்போது அவர்களுக்குள் பிரச்சனை ஆகி விட்டது. மேற்படி பிரச்சனை தொடர்பான புகாரினை கொடுப்பதற்காக எனது அண்ணன் அ.சா.1 ஆனந்தும், நானும் இருசக்கர வாகனத்தில் அவர் ஓட்ட நான் பின்னால் அமர்ந்து கொண்டு ஆனந்த தாண்டவபுரம் ரயில்வே கேட் அருகில் சென்று கொண்டிருந்தபோது எங்களது வாகனத்தை எதிரி சரண்ராஜ் மறைத்தார். எங்களை பற்றி புகார் கொடுக்க போகிறீர்களா கொடுத்தால் உயிருடன் இருக்க முடியாது என்று எதிரி சரண்ராஜ் கூறினார். எதிரி சரண்ராஜ் கையில் வைத்திருந்த அருவாளால் எனது அண்ணன் தலையில் கொத்தி விட்டார். இதை தடுக்க சென்ற என்னை கீழே தள்ளி விட்டு எனது நெஞ்சில் அருவாளால் கீறி விட்டார். சத்தம்கேட்டு அருகில் இருந்தவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து விட்டனர். எனது மாமா மகன் ராஜ்குமார் அவரது இருசக்கர வாகனத்தில் எங்களை அழைத்து கொண்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தார். அங்கு நான் 2 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். எனது அண்ணனுக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்கு தையல் போடப்பட்டது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்ன வேலை செய்கிறீர்கள் என்றால் ஐஸ்கிரீம் கடை வைத்து நடத்தி வருகிறேன். காயம் பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 எனது பெரியப்பா மகன் என்றால் சரிதான். எனது பெரியப்பா மகன் என்ன வேலை செய்கிறார் என்றால் திண்டுக்கல்லில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார். பெரியப்பா மகனுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் சரிதான். எந்த ஊரில் திருமணம் செய்துள்ளார் என்றால் சிதம்பரம். அ.சா.1 ன் மீது குற்ற வழக்கு உள்ளதா என்றால் தெரியவில்லை. சென்னையில் வேலை செய்து வந்தபோது கொரோனா காலத்தில் ஊருக்கு வந்தேன். அ.சா.1 ன் உடைய அண்ணன் நீடூரில் ஊராட்சிமன்ற தலைவராக இருந்து வருகிறார். அ.சா.1 ன் மீது கிராமத்தில் சாதி வழக்கப்படி பஞ்சாயத்து நடந்து விசாரணை மேற்கொண்ட விபரம் தெரியுமா

என்றால் தெரியவில்லை. சரண்ராஜ் என்பவர் வேறு குடும்பம் என்றால் சரிதான். அருள்ராஜ் என்பவர் சரவணன் என்பவரின் நிலத்தை சாகுபடி செய்து வந்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சரவணன் என்பவர் 2 வது எதிரியின் மச்சான் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சரவணன் நிலத்தை அருள்ராஜ் சாகுபடி செய்து வந்த பின்னர் 2 வதுஎதிரி சாகுபடி செய்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விபரங்கள் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக மறைத்து தெரியாது என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அருள்ராஜ் சாகுபடி செய்த வந்த நிலத்தை 2 வது எதிரி சாகுபடி செய்து வந்தாதால் அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்ட அ.சா.2 ன் மீது புகார் கொடுத்து விசாரணை செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விபரங்கள் எனக்கு தெரியும் என்றாலும் அவர் எனது பெரியப்பா மகன் என்பதால் வழக்கிற்காக மறைத்து தெரியாது என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.அ.சா.1 ஒரு பெண்ணை பலவந்தப்படுத்தி அது சம்பந்தமாக பஞ்சாயத்து நடந்து எதிரிகள் நியாயம் கேட்டு சென்ற போது அவர்களை தாக்கி விட்டு அவர்கள் மீது பொய் வழக்கு கொடுத்து அவர்களுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கொற்றவநல்லூர் நீடூர் பஞ்சாயத்து என்றால் சரிதான். கொற்றவநல்லூரில் இருந்து மயிலாடுதுறைக்கு நீடூர் வழியாக வரலாம் என்றால் ஆனந்த தாண்டவபுரம் வழியாகத்தான் குறுக்கு பாதையில் வரலாம். நீடூர் வழியாக வருவது சுற்று வழியாகும். மருத்துவமனையில் நான் எத்தனை நாட்கள் இருந்தேன் என்றால் 2 நாட்கள் இருந்தேன். முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் ஏற்பட்ட காயங்கள் எந்த காலத்திலும் யாராலும் ஏற்பட்டது இல்லை என்றாலும் நானே இருசக்கர வாகனத்தில் இருந்து விழுந்து ஏற்படுத்திக்கொண்ட காயம் என்றால் சரியல்ல. நான் அ.சா.1 ஐ எந்த கால கட்டத்திலும் ஆனந்த தாண்டவபுரம் வழியாக அழைத்து வரவில்லை என்றாலும் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. நானும், அ.சா.1 ம் இருசக்கர வாகனத்தில் சென்ற போது ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 ஆனந்த என்பவர் பக்கத்து ஊரைச் சேர்ந்த கீதா என்பவருரை திருமணம் செய்து கொள்வதாக கூறி திருமணம் செய்ய மறுத்து விட்டதால் மயிலாடுதுறை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு விசாரணை செய்து அ.சா.1 க்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்படி புகார் கொடுத்ததற்கு எதிரிகள் தான் காரணம் என்பதால் அவர்களுக்கு எதிராக இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நானும் ஆனந்தும் இருசக்கர் வாகனத்தில் செல்லவில்லை என்றாலும் எங்களை வழி மறைத்து தாக்கவில்லை என்றாலும் ஆபாச வார்த்தைகளால் எங்களை திட்டவில்லை என்றாலும் சரியல்ல. நாங்களே ஏற்படுத்திய காயத்திற்கு எதிரிக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் 2 எனது பெரியப்பா மகன் என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆனந்த தாண்டவபுரம் ரயில்வே கேட் வருவதற்கு எந்த அவசியமும் இல்லை என்றாலும் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

நீதித்துறை நடுவர் எண் I
மயிலாடுதுறை